# முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

**முன்னிலை : திருமதி.  A. முத்துசாரதா, B.L., P.G.D.P.M.**
**முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்**

2025 ம் ஆண்டு  செப்டம்பர்  திங்கள்  19 ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.48/2020–ல் இ.ம.எண். 4/2025**

1. S.V. சேதுராமன்
2. S. காளீஸ்வரி

................. மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள்

/ எ  தி  ர் /

மெய்யப்பன்

............. எதிர்மனுதார்/வாதி

இம்மனு என் முன்னர் 10.9.2025 ம் நாளன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. E. ரகுராமன் அவர்களும், எதிர்மனுதார்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. C. ஸ்டான்லி மனோகரன் அவர்களும் முன்னிலையாகியும்  மனு உரை, எதிருரை மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும் :

**உ த் த ர வு**

மனுதாரர் தரப்பில் 3.8.2019 ம் தேதி முதல் 20.3.2020 ம் தேதி வரை வரவுகளை காட்டக்கூடிய  மூன்று நோட்டுக்களை பிரதிவாதிகள்  தரப்பு ஆவணங்களாக ஏற்றுக்கொண்டு பி.வா.சா.ஆ 1 முதல் பி.வா.சா.ஆ 3 ஆக

குறியீடு செய்ய அனுமதியளிக்க உத்தரவிடக்கோரி உ.வி.மு.ச. கட்டளை 8 விதி 1(A) (3) கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் மனுவிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலச் சுருக்கம் பின்வருமாறு</u> :–

எதிர்மனுதாரர்/வாதி இந்த மனுதாரர்கள் மீது கடனுறுதிச் சீட்டின்பேரில் தொகையை வசூலிக்க அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். அதில் மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் விசாரணை முடிக்கப்பட்டு மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர்/வாதிக்கு 3.8.2019ம் தேதி முதல் 20.3.2020ம் தேதி வரை உள்ள வரவுகளை காட்டக்கூடிய மூன்று நோட்டுக்கள் வீட்டினை வெள்ளை அடிக்கும்போது கிடைக்கப்பெற்றது. எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் பொழுது வரவு குறிப்பு நோட்டுக்களின் போட்டோ நகல்கள் மட்டுமே வழக்கறிஞரிடம் கொடுத்து எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணங்கள் அசல் வழக்கிற்கு மிக அவசியமானதாக இருப்பதால் மனுதாரர் தரப்பில் 3.8.2019ம் தேதி முதல் 20.3.2020ம் தேதி வரை உள்ள வரவுகளை காட்டக்கூடிய மூன்று நோட்டுக்களை பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக ஏற்றுக்கொண்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்ய அனுமதியளிக்க உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:–</u>

மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை சங்கதிகளுக்கு எதிர்மனுதாரர் தாக்கல் செய்த பதிலுரையை ஏற்றுக் கொள்ளக்கோரி தாக்கல் செய்த I.A.No.1/2022 மனு 1.4.2022ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த பதிலுரையில் எதிர்மனுதாரர், 1,2 பிரதிவாதிகளிடம் தாவா கடனுக்காக எந்த தொகையும் பெற்றுக்கொள்ளவில்லை என்றும், குறிப்பு நோட்டுக்களில் வரவு வைத்துக்கொடுக்கவில்லை என கூறியுள்ளார். மேலும் 1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் " வெற்று புரோ நோட்டில் கையெழுத்து போட்டுக் கொடுத்ததாக" ஒப்புக்கொண்டுள்ள நிலையில் மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் வழக்கிற்கு சம்பந்தமில்லாத 3 குறிப்பு நோட்டுக்களை அவர்களாகவே வரவு வைத்துக் கொண்டு அதை இந்த எதிர்மனுதாரர் வரவு வைத்துக் கொடுத்தது போல் தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி ஆவணம் சாட்சியச் சட்டத்தின்படி செல்லாத ஆவணம் ஆகும். எனவே, மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4)** இருதரப்பு வாதுரைகளின் அடிப்படையில் இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்னை யாதெனில், மனுதாரர் தரப்பில் மனுவில் துலக்கப்பட்டுள்ள மூன்று ஆவணங்களையும் அசல் வழக்கில் ஏற்க இம்மனு அனுமதிக்கப்படத்தக்க்தா ? என்பதேயாகும்.

**5)** இம்மனுவின் பேரில் இருதரப்பிலும் சாட்சிய சான்றுகள் ஏதுமில்லை. இருதரப்பும் கேட்கப்பட்டன.

6) **<u>தீர்வு :–</u>**

அசல் வழக்கானது எதிர்மனுதாரரால் மனுதாரர்கள் மீது கடனுறுதிச்சீட்டின்பேரில் தாக்கல் செய்யப்பட்டு, எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், மனுதாரர்கள் தரப்பில் 1ம் மனுதாரர் தான் பெற்ற கடனை 3.8.2019ம் தேதி முதல் நாள்தோறும் ரூ.1,000/, ரூ.200/– மற்றும் ரூ.100/ என பல்வேறு தவணைகளாக 20.3.2020ம் தேதி முடிய ரூ.1,92,000/ திருப்பிச் செலுத்திவிட்டதாகவும், அவ்வாறு தொகை செலுத்தியதற்கான குறிப்பு சின்ன கைப்புத்தகத்தில் வரவு வைத்து வாதி கையொப்பமிட்டு செய்து கொடுத்துள்ளதாகவும், 3.8.2019 முதல் 22.1.2020 வரையுள்ள வரவினை காட்டக்கூடிய குறிப்பு நோட்டும், 16.09.2019 முதல் 20.03.2020 வரையுள்ள வரவினைக் காட்டக்கூடிய குறிப்பு நோட்டும், 25.11.2019 முதல் 20.3.2020 வரையுள்ள வரவினைக் காட்டக்கூடிய குறிப்பு நோட்டும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் சமயத்தில் மனுதாரர்களுக்கு கிடைக்கவில்லை என்றும், தற்போதுதான் கிடைக்கப்பெற்றதாகவும், மேற்படி ஆவணங்கள் வழக்கிற்கு அவசியமான ஆவணம் என்றும், எனவே, அவ்வாவணங்கள் மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்யவேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணங்கள் இந்திய சாட்சிய சட்டப்படி செல்லாத ஆவணங்கள் என்றும், அவ்வாவணங்களை ஏற்றுக்கொள்ளக்கூடாது என ஆட்சேபணை எழுப்பியிருந்தபோதிலும்,

அவ்வாவணங்கள் செல்லத்தக்க ஆவணங்களா, இல்லையா என்பதை சாட்சிய சங்கதிகளின் மூலமாக அறிய இயலும் என்கின்ற நிலையிலும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குறித்து ஏற்கனவே எதிர்வழக்குரையில் எடுத்துரைத்துள்ள நிலையிலும், மனுவில் துலக்கப்பட்டுள்ள மூன்று ஆவணங்களைப் பொறுத்தும் அசல் வழக்கில் தங்கள் தரப்பு எதிர்வாதத்தை முன்வைக்க எதிர்மனுதாரருக்கு போதிய வாய்ப்பு உள்ள நிலையிலும், நீதியின் நலனைக் கருத்தில் கொண்டும் மனுதாரர்கள் இம்மனுவில் கோருவதைப் போன்று மேற்படி ஆவணங்களை அசல் வழக்கில் கூடுதல் ஆவணங்களாக ஏற்றுக்கொள்ள இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை ஏதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டு, 2025 ம் நாளன்று செப்டம்பர் திங்கள் 19 ம் நாளாகிய இன்று திறந்த அவையில் அவையறியப் பகரப்பட்டது.

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.12.30 13:49:22 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்.**

இரு தரப்பிலும் சாட்சியச், சான்றாவணம் : ஏதுமில்லை

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.12.30 13:49:29 +0530

**மு மா நீ,**
**திண்டுக்கல்.**